# மேம்படுத்தப்பட்ட சமையல் அடுப்பு மற்றும் நிலைத்திறம் பெற்ற கரியின் மூலமான முனைவு - செயல்முறையின் நிகழ்வுகள் (PoA)

## முக்கிய திட்ட தகவல்கள்

இந்த திட்டமிடப்பட்ட செயல்முறை (Programme of Acticvities - PoA) திட்டத்தின் முதன்மையான இலக்கு, சுற்றுச்சூழல் சீர்குலைவுடன், புகை மற்றும் பசுமையில்ல வளிமங்களை உமிழும் பழைய சமையல் அடுப்புகளை அப்புறபடுத்தி, **மேம்படுத்தப்பட்ட சமையல் அடுப்புகளை** (TLUD உயிர்த்திறல் வளிமமாக்கி சமையல் அடுப்புகளை) இந்தியாவில் அறிமுகப்படுத்துவதாகும். இந்த நடவடிக்கைகள் பசுமையில்ல வளிமங்களைக் குறைப்பதற்காக கரிம நிதியுதவியின் (Carbon Funding) ஈடேற, இத்திட்டம் தூய்மையான வளர்சியாக்க முறை (CDM) மற்றும் கோல்டு ஸ்டாண்டர்ட் (Gold Standard) கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். இந்த திட்டம் குறித்த விளக்கம்,திட்ட வடிவமைப்பு குறித்த ஆலோசனை மற்றும் உள்ளூர் பங்குதாரர் ஆலோசனை ஆகியவற்றின் பின்னணியில் பங்குரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். மேற்கண்ட ஆலோசனைகள், சுற்றுச்சூழல் மற்றும் சமூக தரநிலைகளின் படி, பசுமையில்ல வளிம உமிழ்வுகளை சேமிப்பதற்கான திட்டங்களை சான்றுப்படுத்தும் சுவிட்சர்லாந்தின் கோல்டு ஸ்டாண்டர்ட் (Gold Standard) நிறுவனத்தின் சான்றிதழ் நடைமுறையின் ஒரு பகுதியாகும்.

### 1. திட்ட விளக்கம் மற்றும் வடிவமைப்பு

இத்திட்டமிடப்பட்ட செயல்முறையானது (PoA), உயிர்த்திறல் ஆற்றலின் வாயிலாக திறம்பட சமைக்க உதவும் அணைத்து தொழில்நுட்பங்களுக்கும் பொதுவானது. நுண் வளிமமாக்கி சமையல் அடுப்பு வகையிலான TLUD உயிர்த்திறல் வளிமமாக்கி சமையல் அடுப்புகள், ஒரு குவிய தொழில்நுட்பத்தினால் (One Focus Technology) இயங்குகின்றன. மேல் எரியூட்டப்பட்ட சுழிக்காற்று (**Top-Lit Up-Draft -TLUD**) தொழில்நுட்பத்தில், செங்குத்தான கொள்கலநின் மேற்பரப்பில் உலர் உயிரி எரிபொருள் பற்றவைக்கப்படுகிறது. **TLUD** தொழில்நுட்பம், வழக்கமான பழைய அடுப்புகளுடன் ஒப்பிடுகையில், கணிசமான அளவு விறகை சேமிப்பதோடு, கூடுதலாக கரி உற்பத்தி செய்ய வழிவகை செய்கிறது.



படம் 1 - TLUD உயிர்த்திறல் வளிமமாக்கி சமையல் அடுப்பின் தொழில்நுட்பம்

இந்த அடுப்பின் வடிவமைப்பு, எரிபொருளை மேம்பட்ட திறனுடன் எரித்து, நெருபாற்றலை அதிகரிப்பதால்,வழக்கமான பழைய அடுப்புகளை விட மிகவும் குறைவான எரிபொருளை பயன்படுத்துகிறது. இதன் மூலம் வேகமான சமையல், நேரம் மற்றும் எரிபொருள் சேமிப்பு, தூய்மையான பாத்திரங்கள், சமையலறை சுவர்கள் மற்றும் வீட்டின் உட்புற காற்றின் மேம்பட்ட தரம் ஆகியவை சாத்தியப்படுகிறது.இந்த அடுப்பில் கரி எரிக்கப்படுவதில்லை, ஆதலால் அக்கரி சேகரிக்கப்பட்டு இன்ன பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படலாம்.



படம் 2 TLUD அடுப்பின் மேல் சமையல் நடைபெறுகிறது



படம் 3 TLUD அடுப்பில் உருவான கரி

இத்திட்டமிடப்பட்ட செயல்முறை அளவற்ற எண்ணிக்கையிலான அடுப்புகளை விற்க வழிவகுக்கும். தற்போது, ஏற்கனவே

செயல்படுத்தப்பட்டுள்ள இரண்டு கோல்டு ஸ்டாண்டர்ட் நுன்னளவு திட்டங்களின் மூலம் 6,000 TLUD அடுப்புகள் பயன்பாட்டில் உள்ளன.

இந்தியா முழுவதும் இத்திட்டத்தின் கீழ் அடுப்புகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது, எனினும் முதற்கட்ட நடவடிக்கைகள் மேற்கு வங்க மாநிலத்திலிருந்தே துவங்கும்.

**தற்போதைய நிலவரப்படி, திட்டத்தின் பங்கேற்பாளர்கள்:**


சாபியன்ட் இன்போடெக் (Sapient Infotech) தொடர்புக்கு மௌலிந்து பாணர்ஜி, மின்னஞ்சல் sapientinfo1970@gmail.com; செல்: +91 98301 92424

அட்மோஸ்பார் (atmosfair gGmbH): www.atmosfair.org, பெர்லின் ஜெர்மனி, காத்ரின் மிகலாஜெவ்ஸ்கி மினனஞ்சல் (mikolajewski@atmosfair.de)

**உத்தேச நிர்வாக அமைப்பு:**

சாபியன்ட் இன்போடெக் (Sapient Infotech) சமையல் அடுப்பின் விநியோகஸ்தராகவும், கரியினை சேகரித்து விற்கும் ஏற்பாட்டாளராகவும் செயல்படுவார்.

ஜெர்மனியைச் சேர்ந்த இலாபத்திற்காக இயங்காத நிறுவனமான அட்மோஸ்பார் (atmosfair), திட்டத்திற்கான நிதியுதவி மற்றும் கரிம நிதியுதவிக்கான பணிகளை ஒருங்கிணைக்கும்.



மேற்காணும் படத்தில் திட்டமிடப்பட்ட செயல்முறையின் மேலாண்மை அமைப்பு திட்டம் இடம்பெற்றுள்ளது. இது திட்டங்களுக்கேற்றாற் போல மாறுபடும்.

**2. திட்டமிடப்பட்ட செயல்முறையினை உள்ளடக்கிய விதிமுறைகள்:**

1.அணைத்து திட்ட நடவடிக்கைகளும் இந்தியாவிற்குள்ளேயே அமைக்கப்படும்.

2. ஒவ்வொரு திட்டதின் கீழ் வழங்கப்படும் அடுப்புகளுக்கென ஒரு தனிப்பட்ட எண்முறை முறை பயன்படுத்தப்படும்.

3. இத்திட்டத்தின் கீழான எந்த திட்ட செயல்முறையும் தனிப்பட்ட தூய்மையான வளர்சியாக்க முறைத் திட்டமாக (CDM) பதிவு செய்யப்படமாட்டாது. வேறு திட்டத்தின் கீழோ அல்லது பதிவற்ற திட்டமாகவோ செயல்படுத்தப்படாது.

4. தொழில்நுட்ப தேவைகள்:

- இந்த திட்டமிடப்பட்ட செயல்முறையின் (PoA) கீழுள்ள திட்டத்தில், விநியோகிக்கப்படும் புதுப்பிக்கப்படாத உயிர்த்திரள் அடிப்படையிலான சமையல் அடுப்பு பயனாளர்களுக்கு, வெப்பத்திறன் குறைந்தபட்சம் 20% இருத்தல் அவசியம்
- இத்திட்டமிடப்பட்ட செயல்முறையின் (PoA) கீழ் உற்பத்தி செய்யப்படும் கரி, நுண் வளிமமாக்கி வகை சமையல் அடுப்புகளில் விசிறி அல்லது ஊதுகுழல் அல்லது விசையூட்டபட்ட வெப்பச்சுழற்சியின் துணையின்றி உற்பத்தி செய்யபடுதல் அவசியம்.
- இக்கரியினை பயன்படுத்துபவர்கள் முறையே 1. வீட்டு உபயோகம் மற்றும் 2 சிறு மற்றும் குறு தொழில் முனைவோர் அல்லது 3 கரியினை சந்தையில் இருந்து பெறும் வீட்டுக் குடியிருப்புகள் ஆகும். பெரியளவிலான நிறுவனங்கள் பயனாளிகளாக அடையாளம் காணப்பட மாட்டார்கள்.

5. இத்திட்டமிடப்பட்ட செயல்முறையின் தொடக்க தேதிக்கு முன்பாக எந்தவொரு திட்ட நடவடிக்கையும் தொடங்கப்பட மாட்டாது.

6. இத்திட்டமிடப்பட்ட செயல்முறையால் நிகழ்ந்த கூடுதலான உமிழ்வு சேமிப்புகளைக் (additionality) கணக்கிட இத்திட்டம், வரையறுக்கப்பட்டுள்ள

நுண்திட்ட வரம்பிற்கும் கீழான முற்றிலும் நுன்னளவிலான தூய்மையான வளர்சியாக்க முறை திட்டம் என செயல் விளக்கமளிக்கப்படும்.

7. திட்டங்களுக்கான உள்ளூர் பங்குக்குரியவர்களுடனான ஆலோசனை திட்ட செயல்பாட்டு மட்டத்தில் நடைபெறும். அனைத்து திட்டங்களும் ஒரே போன்ற சமூக பொருளாதார சூழ்நிலைகளில் நடைமுறைப்படுத்தப்படும். கீழ்க்கண்ட சூழல்களில், பங்குக்குரியவர்களுடனான ஆலோசனை CPA மட்டத்தில் மீண்டுமொரு முறை நடைபெறும்.

1. திட்ட நடவடிக்கைகள் மேற்கு வங்க எல்லைக்கு அப்பால் மேற்கொள்ளபடுகையில்.
2. திட்ட நடவடிக்கைகள் TLUD தொழில்நுட்பம் அல்லாமல் வேறு தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் பொழுது.

8. திட்ட செயல் அலுவலர் (CME அல்லாத ஒருவராக இருக்கும் வேளையில்) மற்றும் CME பொது நிதி, அதிகாரபூர்வ வளர்ச்சி நிதியில் இருந்து வேறு பயன்பாடிற்கு செல்லாமல் உறுதி செய்ய வேண்டும்.

9. வழக்கமான புதுப்பிக்கப்படாத உயிர்த்திரள் அடிப்படையிலான பழைய சமையல் அடுப்புகளை பயன்படுத்துவோரே, இத்திட்டத்தின் இலக்குகள் ஆவர். மேலும் கரியின் பயனாளிகளாக பெருந்தொழில் புரிவோரை தவிர்த்த இலக்குகள்: 1. வீட்டு உபயோகம் மற்றும் 2 சிறு மற்றும் குறு தொழில் முனைவோர் அல்லது 3 கரியினை சந்தையில் இருந்து பெறும் வீட்டுக் குடியிருப்புகள்.

10. இத்திட்டத்தின் அடுப்புகள் மற்றும் கரியின் விநியோகம், CME மூலமாக நேரடி விநியோகம், திட்ட பங்கேற்பாளர்கள் அல்லது சாபியன்ட் இன்போடெக் (Sapient Infotech) போன்ற பிராந்திய பங்குதாரர் மூலமாக மேற்கொள்ளப்படும்.

11. அடுப்பு மற்றும் கரியினைப் பெறும் இத்திட்டத்தின் இறுதி பயனாளிகள், உமிழ்வு சேமிப்புக்காக UNFCCயின் தூய்மையான வளர்சியாக்க முறைத் திட்டம் மூலமாக கரிம நிதியுதவி கோரும் உரிமையினை ஒப்பந்தம் மூலமாக திட்டத்தின் CMEக்கு அளிக்கின்றனர்.

**திட்டத்தின் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகள் மற்றும் தாக்கங்கள்:**

இந்தியாவின் பெரும்பான்மையான கிராமப்புற மக்கள்தொகை, திறனற்ற களிமண்ணிளாலான உயிர்த்திரள் அடிப்படையிலான பழைய சமையல் அடுப்புகளை பயன்படுத்துவோரே. குறைந்த விலையில், எளிமையாக கிடைத்தாலும், திறனற்ற பழைய மண் அடுப்புகள் பல தீமைகளை விளைவிக்கின்றன:

- விறகுகளை சேகரிக்க மரங்களை வெட்டுவதால் காடழிப்பு பரவலாக நடைபெறுகிறது.
- விறகு சேகரிக்க செலவிடும் நேரத்தினை, TLUD அடுப்புகளினால் பெண்கள் மற்றும் சிறார்கள் கல்வி மற்றும் வாழ்வாதாரத்திற்கு செலவழிக்க இயலும்.
- பழைய புகை உமிழும் அடுப்புகளால், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறார்க்கு மூச்சுயிர்ப்பு நோயால் அவதிப்படுகின்றனர்.
- மேலும், மரபு கரியினை உருவாக அதிக எரிபொருள் தேவைபடுவதால், மென்மேலும் காடழிப்பு நடைபெறுகிறது.

இந்தியாவின் பல பகுதிகளிலும் சுற்றுச்சூழல் நீடிப்புத்திறம், வருமான பகிர்வு சமானம் மற்றும் வாழ்வியல் நலத்திற்கான தேவைகளை சுட்டிக்காட்டி, சமூகங்களின் விருப்பம், வாழ்வியல் முறைகள் மற்றும் விழுமியங்களை கருத்தில் கொண்டு, அதற்கான தீர்வினைக் காண பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இவ்வாய்வுகளின் முடிவுகளைக் கருத்தில்கொண்டே, இந்திய வீடுகளுக்கு மானிய விலையில் TLUD உயிர்த்திறல் வளிமமாக்கி சமையல் அடுப்புகளை வழங்கும் திட்டம் செயல்படுதபடுகிறது. இத்திட்டம் ஈட்டும் கரிம நிதியினைக் கொண்டு, ஏழை எளியவர்களுக்கு மானிய விலையில் இவ்வடுப்பு கிடைக்கும்.

மேலும், பயனாளிகள் சமையலின் முடிவில் உருவான கரியினை விற்பதன் மூலம் கூடுதல் வருமானம் பெறுவர். இத்திட்டம் வீடுகளிடம் இருந்து கரியினை விலைக்கு பெற்று, அதிக மரங்களை எரித்து மரபு கரியினை

பயன்படுத்தும் உணவகங்கள் போன்ற பயனாளிகளுக்கு விற்பதன் மூலம், மாசை குறைக்கும்.
இத்திட்டமிடப்பட்ட செயல்முறை கூடுதலாக பயனாளிகளுக்கு உயர் தர கரியினைப் பெற எதுவான மர எரிபொருள் அல்லது அரிசி உமி போன்ற உயிர்த்திரள் கசடுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட எரிபொருள் உருண்டைகளை வழங்கும்.

TLUD தொழில்நுட்பத்தின் முக்கிய நன்மைகள் பின்வருமாறு:

1. சமையல் எரிபொருளை செமிப்பதோடு, சமையல் எரிபொருளைப் பெறுவதற்கான நேரத்தையும் பணச்செலவையும் குறைக்கிறது. அதோடு காடழிப்பையும் கணிசமாகக் குறைக்கிறது.
2. இயக்குவதற்கு எளிதான, வெப்பச்சிதைவு தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி இயங்குவதால், மேம்பட்ட உயிர்த்திரள் கொண்டு ஒப்பீட்டளவில் LPG அடுப்புகளை விட திறனான சுடர் வெளிப்படுகிறது.
3. அதிகமான நெருப்பாற்றளால் மிக வேகமாக சமைக்க இயலும், மேலும் சமைக்கையில் சுடரின் அளவினைக் கண்காணிக்கும் தேவை இல்லை.
4. உட்புற காற்றின் மாசு குறைவதினால் பெண்கள் மற்றும் சிறார்களின் உடல்நலம் மேம்பட வழிவகுக்கும்.
5. எளிமையாக சுத்தம் செய்யக்கூடிய, நீடித்து நிலைக்கும் துருப் பிடிக்காத எஃகினால் உருவாககப்படுவதால் குறைந்த பராமரிப்பு செலவுடன் இயங்கும்.
6. இவ்வடுப்பில் தயாராகும் கரியினை வழமையான கரயினைப் போலவே எரியூட்ட இயலும்.

மேற்கண்ட நேரடியான பலன்களோடு, சமூகத்தில் கூடுதலாக பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும்,

- அதிக அளவிலான களப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, வேலை வாய்ப்பை பெறுவர்.
- அடுப்பில் உற்பத்தியாகும் கரியின் விற்பனை மூலமாக பயனாளிகள், கூடுதல் வருவாய் பெறுவர்.

3. இத்திட்டத்தின் தோராயமான கால அட்டவணை

ஆகஸ்ட் 2018: வடிவமைப்பு குறித்த ஆலோசனைகளின் துவக்கம்.

ஆகஸ்ட் 2018: உள்ளூர் பங்குக்குரியவர்களுடனான ஆலோசனைக் கூட்டம்.

ஆகஸ்ட் 2018: பங்குக்குரியவர்களிடமிருந்து பின்னூட்டம் பெறும் சுற்றுகள் துவக்கம்

செப்டம்பர் 2018 (பங்குக்குரியவர்களுடனான ஆலோசனைகளுக்குப் பிறகு) TLUD அடுப்புகள் விநியோகம் துவக்கம்.